2. கவன ஈர்ப்பு.

கோவையில் சில பஞ்சாலைகள் மூடப்பட்டது குறித்து

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவையில் சென்ற சில மாதங்களாக லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், கானப்பட்டி பத்மா மில் ஆகிய பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதனால் தொழிலாளர் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் காரியாலயத்தின் முன் மறியல் செய்தும், அதன் தொடர்பாக பெண்கள் உட்பட பல பேர் கைது செய்யப்பட்ட பதட்ட நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலில் நீண்ட நாட்களாக நிலவி வரும் மந்த நிலையின் காரணமாக இம் மாநிலத்தில் பல பஞ்சாலைகள் 1976 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு, ஆகிய ஆண்டுகளில் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன, அவைகளில் சில இயங்காமல் இருக்கின்றன. மாநில அரசு அளித்த உத்திரவாதம், உதவி மற்றைய காரணங் களினால் அவைகளில் 10 ஆலைகள் மறுபடியும் இயங்கத் தொடங்கி யிருக்கின்றன. ஆனால் எழு ஆலைகள் இன்னமும் மூடப்பட்ட நிலையிலேதான் உள்ளன. அவைகளிலே நான்கு ஆலைகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளன.

லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், கானப்பட்டி பத்மா மில் ஆகியவற்றைச் சேர்ந்த ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் 4—7—1977 ஆம் தேதியன்று ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன் மறியல் செய்தனர். அவர்கள் கோஷமிட்டுக் கொண்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குள் பணியாளர்களையும் பொதுமக்களையும் நுழையவிடாது மறியல் செய்தனர். நான்காம் தேதி நடைபெற்ற மறியலில் 59 பேர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த மறியல் 5, 6, 7 ஆகிய தேதி களிலும் தொடர்ந்து நடைபெற்றது. அதில் 219 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை ஜாமீனில் விடுவிக்க அனுமதிக்கப் பட்டிருந்தும் அவர்கள் அதற்கு இணங்காததால் காவலிலே வைக்கப்பட்டனர். எட்டாம் தேதி மறியல் நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்ட எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1977 ஜூலை 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

இந்த அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் தொழிற் சங்கத் தலைவர்களோடு பேசி, மூடிய ஆலைப் பிரச்சினைபற்றி பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளது. 9 ஆம் தேதி தொழிலாளர் நல அமைச்சரோடும், 11 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்ச ரோடும் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளன. இதுகுறித்து மேலும் ஏற்பட்ட கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின் அடிப் படையில் இன்னும் சரியான விளக்கம் தேவைப்படுகிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பஞ்சாலைகளை மூடுகின்ற மூடுவிழாப் பிரச்னை கடந்த 15 ஆண்டுக் காலமாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. அவ்வப்போது 1, 2, 5, 10 ஆலைகள் என்ற அளவிலே மூடப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. ஒரு கட்டத்திலே 1967 ஆம் ஆண்டிலே 20 பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடந்தன. அதில் 10 ஆலைகள் இன்றைக்கு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனால் தேசியமய மாக்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் மறுபடியும் பஞ்சாலைகள் மூடப்படுகின்றன. இப்போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றிரண்டு கேள்விகள் விளக்கம் பெறுவதற்குக் கேட்கலாமே தவிர பெரிய பேச்சாகப் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: நான் கேள்விதான் கேட்கிறேன், பிரசங்கம் செய்யவில்லை. அமைச்சர் அவர்கள் சொன்னதின் அடிப்படையைக் காட்டவேண்டிய நிலை இருக்கிறது, அதற்காகத்தான் சொல் கிறேன். பஞ்சாலை மூடுவிழா மட்டுமல்ல, மற்றத் தொழில்களிலும் மூடுவிழாக்கள் நடக்கின்றன, ஆனால் பஞ்சாலைத் தொழிலில் மிஸ்மானேஜ்மெண்ட் என்ற முறையிலே மூடப்படுகின்றன. அரசாங்கத்திடம் பணம் கேட்கிறார்கள், கொடுக்கிறார்கள், ஆனால் மறுபடியும் பஞ்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமைதான் ஏற்படுகிறது. இப்படியே பல ஆண்டுகள் போய்விட்டன. இந்தத் தொழில் இதனால் பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள், உற்பத்தியும் பாதித்து கைத்தறிக்கு

நூலும், மக்களுக்கு துணியும் கிடைக்க முடியாமல் போகிறது. அதற்கு ஒரு நல்ல முடிவை எடுத்தாக வேண்டும். அதற்கு என்ன வழியென்றால் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன், நிச்சயமாக பஞ்சாலைத் தொழில் உருவாக்கப்பட்டு வளர்ந்து வந்த தொழில், அந்தத் தொழிலிலே மிஸ்மானேஜ்மெண்ட் காரணமாக பிரதான மாக மூடுவிழாக்கள் வருகின்றன.

(முற்பகல் 9.10)

இதைத் தேசிய மயமாக்குவதைத் தவிர வேறு வழி இல்லை. அதை இந்த அரசு உடனே செய்து விட முடியாது. ஆகவே, மூடப்படும் இந்தப் பஞ்சாலைகளை தேசியமயமாக்குவதற்கு தொழிலாளர்களின் ஆதரவையும் பெற்று—நிச்சயமாக அவர்கள் ஆதரவு அளிப்பார்கள்—மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவதற்குத் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்னை பற்றி கேள்விகள் கேட்டு விளக்கம் பெற விரும்புகிறார் நண்பர் அவர்கள். நேற்றையதினம் என்னை மாண்புமிகு உறுப்பினரும், மற்றத் தொழிற்சங்கத் தலைவர்களும் சந்தித்து அதைப்பற்றி விரிவாக நாங்கள் மனம் விட்டுப் பேசினோம். அதற்குப்பிறகு அதைப்பற்றிச் சிந்தித்து விரைவிலே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எந்தெந்த வகையில் இந்த அரசால் அதற்கு ஆவன செய்ய முடியுமோ அனைத்தும் செய்ய முயற்சிக்கப்படும் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம் என்பதை இங்கே இந்த இடத்திலே கூறிக்கொள்கிறேன். இதுதான் எங்களுடைய பதில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த குறிப்பிட்ட உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் கேள்வி கேட்கக் கூடாது. அடுத்து, ஆளுநர் உனக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.